8. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம், உதயமார்த்தாண்டபுரத்தில் உள்ள ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை அருகில் உதயமார்த்தாண்டபுரத்தில் உள்ள ஏரியில் பறவைகளின் சரணாலயம் அமைப்பதற்கு வனத்துறையில் ஏற்கப்பட்டு சரணாலயமாக அறிவிக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துபேட்டை அருகில் உள்ள உதயமார்த்தாண்டபுரம் ஏரி சமுதாய காடுகள் எழுப்பும் திட்டத்தின் கீழ் சுமார் 111 ஏக்கர் பரப்பளவில் மரம் நடப்பட்டு வனத்துறையினரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த ஏரியில் சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் கருவேல் மரங்கள் நடப்பட்டு தற்பொழுது நன்கு வளர்ந்துள்ளதால், சில அபூர்வ வகைகளான பறவைகள் தற்போது அங்கு வந்து தங்க ஆரம்பித்துள்ளன. அப்பகுதியினை அதிகாலை அல்லது மாலையில் பார்வையிட்டால், ஆயிரக்கணக்கான பறவைகள் பறப்பதையும், உணவெடுப்பதையும், தூங்குவதையும் காணலாம். இப்பகுதியினை தலைமை வன உயிரினக் காப்பாளர் 7-2-1990-லும் மற்றும் முதன்மை வனத்துறைத் தலைவர் 24—3—1990-லும் பார்வையிட்டு பறவைகள் சரணாலயம் என அறிவிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து ஆலோசித்து வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 18-இன் கீழ் உதயமார்த்தாண்டபுரம் ஏரியினை சரணாலயமாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இன்றைக்கு வெளி நாடுகளிலிருந்து குறிப்பாக பாகிஸ்தான், சைனா, ஸ்ரீலங்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, போலந்து இப்படிப்பட்ட

11-10 மணி

பகுதிகளிலிருந்து எல்லாம் பறவைகள் வர ஆரம்பித்திருக்கின்றன. நான் கையிலே வைத்திருக்கக்கூடிய வளையம்கூட அந்தப் பறவைகள் ஒன்றின் காலிலே கட்டப்படும் வளையம்தான். அதிலே 'Inform environment—Tehran' என்று ஆங்கிலத்திலும் அதன்கீழே பெர்ஷியன் மொழியிலும் எழுதியிருக்கிறது. இது ஒரு பறவையின் காலிலே இருந்து கிடைத்த வளையம். B.,N.H.S.—Bombay Natural History Society-க்கு அனுப்பியிருந்தேன். அவர்களும் லெட்டர் அனுப்பியிருக்கிறார்கள். The flamingo was ringed as juvenile on 27-8-1988 at Tendis Lake in U.S.S.R. இப்படி ரஷ்ய நாட்டில் Tendis Lake பகுதியிலே இருந்து பறவைகள் எல்லாம் இங்கே வருகின்றன. இங்கே வந்த அந்தப் பறவைகளின் வளையங்கள் எல்லாம் கூட எடுக்கப்பட்டு எல்லாம் அனுப்பப்பட்டு இருக்கிறது. இப்படிப் பல நாடுகளில் இருந்து வருகின்ற அந்தப் பறவைகள் இன்றைக்கு உதயமார்த்தாண்டபுரம் ஏரிக்கு வருகின்றன. அந்த ஏரி மிகச் சிறிய ஏரி. அதனை இன்றைக்கு சயன்டிஸ்ட்டுகள் எல்லாம் 'a mini—Bharatpur of the South in the making' என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்த இடத்தை மேலும் தீவிரமாக ஒரு சரணாலயமாக அறிவிப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு 'பெர்ஸ்பெக்டிவ் பிளான்'—அதைச் சுற்றி வருகின்ற சாலைகள், அங்கு ஒரு கெஸ்ட் ஹவுஸ், தனியாக ஒரு ரேஞ் ஆபீசர்—இப்படியெல்லாம் அங்கே போட்டு அதனைப் பாதுகாக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் அந்தக் கிராமத்தில் திரு. எஸ். பஞ்சாபகேசன், விவேகானந்தம், யாகுப் அலி, ஐயப்பன் போன்ற இளைஞர்கள் அதற்கு ஒரு பாதுகாப்புக் குழுவை ஏற்படுத்தித்தான் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த கிராமத்தில் சாவு ஏற்பட்டால் கூட மேலே 'வாணம்' விடுவது போன்றவற்றை எல்லாம்கூட நிறுத்தி இருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை நெல் குறைந்தாலும் பரவாயில்லை, எங்களுக்குப் பறவைகள்தான் வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். பறவைகள் வர வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் எண்ணி அந்தப் பறவைகளுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள். இதனை எல்லாம் கருத்தில் கொண்டு, வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அந்தப் பறவைகள், அவைகளினுடைய 'migratory pattern' இவ்வளவு தூரம் வருகிற migratory pattern, அவைகளினுடைய வழித் தடங்கள் route — இவைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்கின்ற ஒரு முறையையும் அங்கே கொண்டு வர வேண்டும். அங்கே இருக்கின்ற திரு. நாகநாதன் என்கின்ற ஒயில்டு லைஃப் வார்டனையும் அதிலே விசேஷ அக்கறை காட்டுமாறு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லி, அதன் மீது அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதனை உங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யம் அருகிலே கோடியக்கரை இருக்கின்றது. அங்கே மான் சரணாலயம் இருக்கின்றது. இங்கு ‘மான், மான்’ என்று எல்லாம் பேசப்பட்டது. நான் சொல்வது ‘புள்ளி மான்’. ‘பிளாக் பக்’ என்று சொல்லக் கூடிய மான் சரணாலயம் கோடியக்கரையிலே இருக்கின்றது. அதுபோல அங்கே ஆயிரக்கணக்கான பறவைகளும் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜேந்திரன் குறிப்பிட்டது போல ரஷ்ய நாட்டிலே இருந்து பறவைகள் பறந்து வந்து கோடியக்கரைவரை வருவதாக நம்புகிறார்கள். உதயமார்த்தாண்டபுரமும் கோடியக்கரை அருகிலேதான் இருக்கின்றது. முத்துப்பேட்டை அருகிலே இருக்கின்றது. ஆகவே, அங்கேயும் அந்தப் பறவைகள் வருவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உதயமார்த்தாண்டபுரம் ஏரி என்பது நல்ல பெயர். ஆகவே, ஒரு சரணாலயம் ‘பேர்ட்ஸ் சாங்சுவரி’ அமைப்பதற்கு வனத்துறை தீர்மானித்து இருக்கிறது.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லாததும், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ஏ. செங்கோட்டையன், வி. கே. சின்னசாமி, வே. நா. சுப்பிரமணியம், வே. பெரியசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, “பெரியார் மாவட்டத்தில் பல ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்காததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டை உடனடியாக சமாளிக்க மாறுபட்ட பருவ நிலையின்கீழ் திட்டமும், மாற்றுக் குழாய்த் திட்டமும் செயல்படுத்த அரசிற்கு தெரிவித்துள்ளார்.